**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

## (துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## குறித்துரைக்கப்பட்ட கரையோரப் பணிநிலை உத்தியோகத்தர் – நிலையான தவணை ஒப்பந்த அடிப்படை (01 வெற்றிடம்)

**தகைமைகள்:-** வகுப்பு I உடன்கூடிய முதுமாணி தகுதிச் சான்றிதழ் (COC).

குறைந்தது 03 வருடங்கள் கடலில் பிரயாணித்த அனுபவத்தினை (மொத்தச்சரக்கு கப்பல்களிலான அனுபவம் விரும்பத்தக்கது) கொண்ட கடலியல் வல்லுநர்.

**அனுபவம் :-** அங்கீகரிக்கப்பட்ட கப்பல் உடமை மற்றும் தொழிற்பாட்டுக் கம்பனியொன்றின் குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர் ஒருவராக குறைந்தது 01 வருட அனுபவம்.

**சம்பளம் :-** 450,000/- ரூபா கொண்ட மாதாந்தப் படியும் தற்போதய அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வாகனம் மற்றும் எரிபொருள் படிகளும்.

**<u>தொழில் விவரணம்</u>**

**பொறுப்புகள்:**

- கம்பனியின் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) தொடர்பாடல் செய்தலும் பயனுறுதி வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்தலும்.
- தொழில்நுட்ப திணைக்களத்துடன் உசாவுதலைச் செய்து இந்நிறுவனத்தின் அதிபதிகளுடனும் (Masters) முகாமையுடனும் விடயங்களை ஆலோசித்து ஒருங்கிணைப்புச் செய்தல்.
- தொழில்நுட்ப திணைக்களத்தின் தலைவருடன் உசாவுதலைச் செய்து சகல CSC கப்பல்களினதும் கரையோர அடிப்படை மற்றும் கப்பல் இரண்டிலும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) / உள்ளக கணக்காய்வினை நடைமுறைப்படுத்தல்.
- பல்வேறுபட்ட கப்பல் பதிவுகளை அடிக்கடி சோதிப்பதன் மூலம் கப்பல் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல்.
- கப்பலில் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) கண்காணித்து தரமுயர்த்துவதையும் அத்துடன் கப்பல் பதிவுகளைத் தொடர்வதையும் உறுதிப்படுத்தல்.
- சகல நியதிச்சட்ட மற்றும் வகைப்பாட்டு அமைப்பு ஆய்வுகளை உரிய நேரத்தில் கட்டளையிடுதலும் மேற்கொள்தலும்.

- போதுமான வளங்களும் கரையோரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆதரவும் வழங்கப்படுவதையும் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பெறுகையையும் உறுதிப்படுத்தல்.
- தொடர்ச்சியான கண்காணிப்பு, விசேடமாக பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் (SMS) பயனுறுதித்தன்மை பற்றி DPA மதிப்பீடு மற்றும் மீளாய்வு என்பவற்றுக்கான தொலைதூரக் கண்காணிப்பு.
- கப்பற் பணியாளர்களின் இணக்கமின்மைகள், விபத்துகள் மற்றும் அனர்த்த நிகழ்வுகள் பற்றி புலன்விசாரணை செய்தல், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- முகாமைத்துவ மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும் அத்துடன் அவை பற்றிய பதிவுகளை வைத்திருத்தலும்.
- IMO தேவைப்பாடுகளுடன் இணக்கமாக மிக அண்மைய வழிகாட்டல்களுக்கு இணங்க உரிய அதிகாரபீடங்களினால் தேவைப்படுத்தப்படுமாயின் மேலதிக கைந்நூல்களைத் தயாரித்தல்.
- அவசர நிலமைகளை உள்ளடக்கி கப்பல்/கரையோர எதிர்பாரா நிகழ்வுத் திட்டங்களைத் தயாரித்தலும் மீளாய்வு செய்தலும்.
- கடல்சார் கப்பல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் கொள்கைகளானவை சர்வதேச ஒழுங்குவிதிகளுக்கிணங்க இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல்.
- தொழில்நுட்ப திணைக்களத்தின் தலைவருடனும் CH&A திணைக்களத்துடனும் ஒருங்கிணந்து அதிபதிகளுக்கு (Masters) கடற்பயண அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- வெளிநாட்டு துறைமுக முகவர்களின் நியமனங்களில் ஆலோசனை வழங்குதல்.

**வயதெல்லை :** 35 வயதிற்கு குறையாமலும் 60 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்புறுதிக் காப்பீடு
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு
4. தொடர்பாடல் செலவுகளை மீளளித்தல்

**பொது அறிவுறுத்தல்கள்**

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் விளம்பரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளரிடம் சென்றடையும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அல்லது chairman@cscl.lk / hr@cscl.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுக.

- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**இல: 27, MICH கட்டடம்**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**
**கொழும்பு 01**

**மேலதிக விபரங்களுக்கு - (+94) 011 249 7800, விரிவு. 258 - மனித வளத் திணைக்களம்**

திகதி: 08.09.2024